1972 டிசம்பர் 6]

Road-side temples in Madras City.

*60 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon . the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to control road-side temples in Madras City ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : சென்னை நகரத்தில் மட்டுமல்ல, பல இடங்களிலே சாலை ஓரங்களில் திடீர் கோயில்கள் தோன்றுவதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தோன்றுவதைக் கட்டுப்படுத்த அப்படித் தோற்றுவிப்பவர்கள்தான் முடிவு செய்துகொள்ள வேண்டும். தோற்றுவிக்கப்பட்ட கோயில்களை அப்புறப்படுத்துவதற்கு 1860 வருட சட்டமும் 1919 சென்னை மாநகராட்சி விதிகளும் ஏற்கனவே இருக்கின்றன. அவற்றை செவ்வனே நிறைவேற்றினல் அதைச் செய்ய முடியும்.

திரு. ஆ. பரந்தாமன் : சாலையோரங்களிலே ஆலயங்களைக் கொண்டு வருகிறவர்களைத் தடுக்க ஏதாவது சிறப்புத் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கொண்டுவருகிறவர்கள்தான் அதற்குப் பதில் சொல்லமுடியும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட சாலையோரக் கோயில்களை சிலர் வியாபார நோக்கத்தோடு நடத்துவதற்காக அப்படிப்பட்ட சாலையோரக் கோயில்களை அமைக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? அதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுமா ? மு.ப. 10·

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சாலையோரத்தில் ஏற்படுத்தப்படும் கோயில்களை வியாபார நோக்கத்தோடு செய்கிறார்கள் என்பதும் உண்மை. அப்படிப்பட்ட கோயில்கள் நடைபாதை வாசிகளுக்கும், பொது மக்களுக்கும் இடையூருக இருப்பதை உணர்கிறோம். அவைகளையெல்லாம் நீக்க வேண்டுமென்று சட்டமன்றத்திலும்கூட எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் அந்த எண்ணத்தோடு இருப்பார்கள். ஆனல் வெளியிலே நடவடிக்கை எடுக்கும் நேரத்தில் பிரச்னையாக்கி, பொதுமக்களிடத்தில் குழப்பம் விளைவிக்கக்கூடத் தயாராக

இருக்கிறார்கள். ஆகவே எல்லாக் கட்சியினரும் அந்த முடிவுக்கு வந்தால் பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும் நடைபாதைக் கோயில்களை அகற்றுவது என்பது மிகவும் சுலபமான காரியம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, மக்களாக சாலை யோரங்களில் கோயில்களை ஏற்படுத்துவதை நாம் கட்டுப்படுத்த முடிகிறது, கார்ப்பரேஷன் நினைத்தால் அதைக்கூட அப்புறப்படுத்தி விடுகிறார்கள். இதைத் தடுப்பதற்காக, சில பகுதிகளில் நாமாகக் கட்டுவதை இப்படி எடுக்கிறார்கள். ஆண்டவனே உருவாவதாக நம்பிக்கை இருக்க வேண்டுமென்று ஆறடி பள்ளம் எடுத்து வேர்க்கடலை, தவிட்டை வைத்து லிங்கத்தை வைத்துவிட்டால் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு வாரத்திலே மேலே வந்துவிடுகிறது என்று சொல்லப் படுகிறது. அப்படிப்பட்ட முயற்சி நடக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இத்தகைய செய்திகள் வெளியே தெரிந்திருக்கின்றதால்தான் உறுப்பினர்களும் இந்தக் கேள்விகளைக் கேட்கிறார்கள்.

திரு. க. மு. இராசகோபால் : துணைத் தலைவரவர்களே, பாதைகளிலே இருக்கும் வீடுகள் நெடுஞ்சாலைகளிலே அதிகமாகப் பாதையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது என்பதற்காகச் சட்டம்போட்டு அதெல்லாம் இடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வீதிகளில் கட்டப்பட்ட கோயில்களை அப்புறப் படுத்த அதிகாரிகளே அச்சப்பட்டு பயந்து விடுவதாகத்தெரிகிறது. எனவே தனிப்பட்ட நபர்கள் கட்டும் வீடுகளை அப்புறப்படுத்த சட்டம் இருக்கிற பொழுது கோயில்களை அப்புறப்படுத்த சட்டம் இல்லாமல் இருக்கின்ற நிலையை மாற்றி எந்த இடமாக இருந்தாலும் நெடுஞ்சாலைகளில் பாதைகளுக்கு இடையூறு இல்லாமல் அரசு செப்பனிடுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நடைபாதை ரோடுகளைச் செப்பனிட ஏற்கனவே, அங்கே ஏற்பட்டிருக்கும் அத்தகைய ஆக்கிரமிப்புகளை வெளியேற்ற இருக்கின்ற சட்டத்தைப்போல கோயில் களிலும் நடைபாதைக் கோயில்களை அப்புறப்படுத்த ஏற்கனவே விதி முறைகள் இருக்கின்றன. அவைகளைச் செயல்படுத்துவதிலேதான் சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதை ஏற்கனவே நான் கூறியிருக்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, சாலையோரங்களில் கோயில்கள் மட்டுமல்ல, சில மரங்களும் கூடக் கோயில்களாக மாறி விடுகின்றன. பனைமரங்களில் பனையடிக்கறுப்பு என்று சொல்கிறார்கள். இவ்வாறு பக்கத்தில் உள்ள நிலச் சொந்தக்காரர்களால் உருவாக்கப்பட்டது என்பதை அறிய முடிகிறது. அதிகாரிகள் அதை அப்புறப்படுத்தச் செல்லும் பொழுது அவர்களிலும் ஒரு சிலர் கன்னத்திலே போட்டுக்கொண்டு திரும்பி விடுகிறார்கள். தயவுகூர்ந்து, அந்த அதிகாரிகளுடைய அச்சத்தைத் தவிர்க்க பெரியாரிடத்திலே கொஞ்சநாளைக்கு பயிற்சி பெற அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பெரியார் அவர்களுடைய அறிவுரையைப் பெற்றுக்கொள்ள யாருக்கும் தடையில்லை.

1972 டிசம்பர் 6]

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, சாலையோரக் கோயில் களைப் பற்றிப் பேசப்பட்டது. சில பகுதிகளில் சாலை நடுவிலே ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. அரசு அதற்கு என்ன செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சாலையின் ஓரங்களிலேயிருந்தாலும், சாலை நடுவிலேயிருந்தாலும் அத்தகைய ஆக்கிரமிப்புகளை அகற்ற ஏற்கனவே நம் சட்டத்தில் விதிமுறை இருக்கிறது. ஆனால் அதைச் செயற்படுத்தும் நேரத்தில் பல அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், பக்தர்களின் சங்கங்கள் என்று வைத்திருப்பவர்களும் அதற்காகக் கிளர்ச்சி செய்யும் நிலைமையை நாம் பார்க்கிறோம். ஆனால் சர்வ கட்சிகளின் தலைவர்களும், இந்தக் கோயில்கள் சம்பந்தமாக ஈடு பட்டிருக்கும் சங்கங்களும் ஒன்று சேர்ந்தால் எந்த இடத்தில் அத்தகைய ஆக்கிரமிப்பு இருந்தாலும் ஒரு நாளிலேயே அவற்றை அகற்ற முடியும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, இப்படித் திடீரென்று ஏற் படும் சாலையோரக் கோயில்களில் ஆண்டவன் இருக்கிறாரா என்பதுபற்றி அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சாலையோரக் கோயில்களுக்கு நான் போனதில்லை, அங்கு ஆண்டவன் இருக்கிறாரா என்ற ஆராய்ச்சியிலும் இறங்கவில்லை.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட சாலையோரக் கோயில்களில் பெரும்பகுதி வியாபாரமாக நடந்துகொண்டிருக்கிறது. அந்த கோயில்களிலே வசூலாகும் உண்டியல் பணத்திற்காக இப்படிப் பட்ட கோயில்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன. எனவே அப்படிப்பட்ட கோயில்களின் வருமானத்தை அரசாங்கமே எடுத்துக்கொண்டால் இந்தக் கோயில்கள் உற்பத்தியாவது தடுக்கப்படும் என்று நான் கருதுகிறேன். அந்த முயற்சியில் அரசாங்கம் இறங்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நம்முடைய அறநிலையச் சட்டத்தின்படி எந்தக் கோயிலில் 200 ரூபாய்க்கு மேல் வருமானம் வந்தாலும் அறநிலையம் எடுத்துக்கொள்ளும். 200 ரூபாய் வருமானத்திற்குமேல் தெருவிலே உள்ள கோயிலாக இருந்தாலும் நாம் எடுத்துக்கொள்ளத் தயங்கமாட்டோம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அரசாங்கத்தில் வீடுகளுக்கும் நிலத்திற்கும் உச்சவரம்பு கட்டுவதுபோல் இம்மாதிரி சாலையோரக் கோயில்களுக்கு மட்டுமல்லாமல், புதிதாகத் திடீர் திடீரென்று உருவாகும் கோயில்களுக்கு உச்சவரம்பு கட்ட ஆலோசிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட உச்சவரம்பு பற்றிய எண்ணம் இல்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, மக்கள் பெருக்கம் ஏற்படுவதைத் தடுக்க குடும்பக் கட்டுப்பாடு கொண்டு வருகிறோம். அதைப் போல சாலையோரங்களில் சுற்றிப் பார்க்கும்பொழுது வழித்தடங்களில் கோயில்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே வட்டங்கள், மாவட்டங்களில் இவ்வளவு கோயில்கள் இருக்கலாம் என்று வரையறுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அதிகமாகச் சுற்றாமல் இருப்பது நல்லது.

திரு. எஸ். முகமது கோதர் முகைதீன் : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் காலன் குடியிருப்பு என்ற குடியிருப்பில் திடீரென்று ஒரு பிள்ளையார் கோயில் ஏற்பட்டது பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ? அவ்வாறு வந்திருந்தால் அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அதுபற்றித் தகவல் அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றித் தெரிவித்தால் பரிசீலிக்கப்படும்.

திரு. க. மு. இராசகோபால் : தலைவரவர்களே, இருநூறு ரூபாய் வருமானத்திற்கு மேலுள்ள கோயில்களை அரசாங்கம் ஏற்பதாகச் சொன்னார்கள். சின்ன காஞ்சிபுரத்திலுள்ள வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு இலட்சக்கணக்கான ரூபாய் இருந்தும் அந்தக் கோயிலை அரசாங்கம் ஏற்றிருப்பதாக இதுவரையில் தெரியவில்லை. அப்படி ஏற்றிருந்தால் அறங்காவலர்களை ஏன் நியமிக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதுபற்றித் தகவல் என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. அடுத்து ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]